


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.6.2023) தலைமைச் செயலகத்தில், திடக்கழிவு மேலாண்மை குறித்த தொழில்நுட்பத்தை அறிந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்துவதற்காக ஸ்பெயின், இத்தாலி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளதையொட்டி பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என். மகேசன், செயற்பொறியாளர் விஜய்அரவிந்த் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.6.2023) தலைமைச் செயலகத்தில், மாநில தலைமை தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள ஷகில் அக்தர், இ.கா.ப., (ஓய்வு) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.6.2023) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான அமெரிக்க நாட்டுத் தூதர் எரிக் கார்செட்டி அவர்கள் (Mr. Eric Garcetti) சந்தித்துப் பேசினார்.

### செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார்!

# நிதியமைச்சர் தங்கம் தென்னரசுக்கு கூடுதலாக மின்துறை!

## வீட்டுவசதித்துறை அமைச்சர் முத்துசாமிக்கு மதுவிலக்கு - ஆயத்தீர்வைத் துறை!

### கூடுதலாக ஒதுக்கி அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூன்.18-

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு மின்துறையை கூடுதலாகவும், வீட்டு வசதித் துறை அமைச்சர் ச.முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையை கூடுதலாக ஒதுக்கியும், செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார் எனவும் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

இது குறித்து அரசின் ஆணை வருமாறு:

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் பொறுப்பில் இருந்த மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகியவை அவரது உடல் நிலையின் காரணமாக, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கு மின்சாரத் துறையும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் ச.முத்துசாமி அவர்களுக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையையும் பிரித்து வழங்கி இன்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வி.செந்தில் பாலாஜி அவர்கள் இலாகா இல்லாத (Minister without portfolio) அமைச்சராகத் தொடரவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

# செந்தில் பாலாஜியிடம் அமலாக்கத்துறை நடந்துகொண்டது மனித உரிமை மீறல்!

### சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, ஜூன் 18 -

புதுக்கோட்டை மாவட்ட நெடுஞ்சாலை துறை சார்பில் சாலை விரிவாகத்திற்காக 75 மரங்கள் வெட்டப்பட உள்ளது அதை ஈடு செய்யும் வகையில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 750 மரக்கன்றுகள் நடும் விழா சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் எஸ்.ரகுபதி மரக்கன்றுகளை நட்டு திட்டத்தை தொடக்கி வைத்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி



செந்தில்பாலாஜி சிறைத் துறை கட்டுபாட்டில் இல்லை,நேற்று முன் தினம் இரவு முதல் தான் அவர் சிறை துறையின் கட்டுப்பாட்டில் உள்ளார், சிறை துறையின் நடைமுறைப்படி ஒரு நாட்களுக்கு மூன்று மனுதாரர்கள் செந்தில் பாலாஜி சந்திக்கலாம். குடும்பத்தினரும் வழக்கறிஞர்களும் அவரை சந்திக்கலாம்,

முறைப்படி சிறை துறையின் அனுமதி பெற்ற பின்னர் தான் யாராக இருந்தாலும் அவரை பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இதுதான் சிறைத்துறை விதி.

செந்தில் பாலாஜியிடம் அமலாக்கத்துறை நடந்து கொண்டது மனித உரிமை மீறல், 17 மணி நேரத்திற்கு மேல் அவரை துன்புறுத்தி உள்ளனர். இது ஒரு ஜனநாயக படுகொலை. இதுதான் அவருக்கு நெஞ்சுவலி வந்ததற்கான காரணம். எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடந்துவிடக் கூடாது என்பதால் தான் சி.பி.ஐ. இனிமேல் தமிழ்நாடு அரசின் அனுமதி பெற்று விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளது. இது அந்த சட்டத்தில் வரும் சி.பி.ஐ. அமலாக்கத்துறை உள்ளிட்டவைகளுக்கும் பொருந்தும். அமைச்சர் செந்தில் பாலாஜி கொடுமைப்படுத்தி தி.மு.க.வை அச்சுறுத்துவதற்காகத்தான் அமலாக்கத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி மீது இதுபோன்ற அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் தி.மு.க. எதற்கும் அஞ்சாது என்று பா.ஜ.க. விற்கு தெரியாது, இந்த விவகாரத்தில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி விமர்சனம் செய்வது, அவர் புத்திக்கு ஏற்றவாறு அவர் விமர்சனம் செய்வதை காட்டுகிறது.

**சட்டம் அனைவருக்கும் சமம் தான்!**

சட்டம் அனைவருக்கும் சமம் தான், நீதிமன்ற உத்தரவுப்படி டி.ஆர்.பாலு தொடந்த வழக்கில் அண்ணாமலையும் நீதி மன்றத்தில் ஆஜராக வேண்டும்.

நீதிமன்ற தீர்ப்புக்கு நாங்கள் கட்டுப்பட்டவர்கள்.

நீதிமன்றம் என்ன உத்தரவு இடுகிறதோ, அதன்படி தான் தி.மு.க. எப்போதும் நடக்கும் அ.தி.மு.க.வை பணிய வைப்பதற்காக தி.மு.க. அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்த கேள்விக்கு பதில் அளித்த எஸ். ரகுபதி அது உங்களுடைய யூகம் என்றார்.




மாணவர்களின் நலன் பாதிக்கும் வகையில் செயல்படும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து நேற்று முன்தினம், காலை ஆளுநர் மாளிகை அருகே சின்னமலை சந்திப்பில் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க. தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் கழக மாணவர் அணி நிர்வாகிகள் உட்பட மாணவர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஆளுநருக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் (16.06.2023) கல்லணையிலிருந்து டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மா.பிரதீப் குமார், (திருச்சிராப்பள்ளி), தீபக் ஜேக்கப், (தஞ்சாவூர்), திருமதி. தி.சாருஶ்ரீ, (திருவாரூர்), ஜானி டாம் வர்கீஸ், (நாகப்பட்டிணம்), திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, (புதுக்கோட்டை), ஏ.பி.மகாபாரதி, (மயிலாடுதுறை), நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், செ.ராமலிங்கம், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), மாநகராட்சி மேயர்கள் மு.அன்பழகன் (திருச்சிராப்பள்ளி), சண் ராமநாதன் (தஞ்சாவூர்) தலைமை பொறியாளர் (நீ.வ.து) பொறி.இராமமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருங்குடிமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்களின் துறைகள் மாற்றம் - ஆளுநர் தலையிட அரசியல் சட்டத்தில் இடமில்லை!

# முதலமைச்சரின் அதிகாரத்தை ஆளுநர் பறிக்க முயல்வதா?

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. கண்டனம்!

சென்னை, ஜூன் 18-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, அமலாக்கத் துறையின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதாலும், உடல் நலம் இன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் இருப்பதாலும் அவர் வகித்து வரும் துறைகளை மற்ற அமைச்சர்களுக்கு மாற்றிட முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆளுநருக்குப் பரிந்துரை அனுப்பி உள்ளார்.



அதன்படி மின்சாரத் துறையை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களுக்கும் மாற்றி ஆளுநரின் ஒப்புதலுக்காக முதலமைச்சர் கடிதம் அனுப்பி இருந்தார்.

ஆனால்முதல்வரின்பரிந்துரையை ஆளுநர் ஆர்.என். ரவி ஏற்காமல் திருப்பி அனுப்பி இருக்கிறார்.

அரசியல் சட்டப்பிரிவு 163ன்படி, முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி ஆளுநர் கடமையாற்ற வேண்டும்.

முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களை நியமனம் செய்ய வேண்டும்.

எனவே அரசியலமைப்புச்சட்டபடி மாநிலஅமைச்சர்கள் நியமனம் மற்றும் அவர்கள் வகிக்கும் இலாகா மாற்றங்கள் குறித்து தீர்மானிக்க வேண்டியது முதலமைச்சரின் அதிகாரமாகும். ஆளுநர் இதில் தலையிட அரசியல் சட்டத்தில் இடம் இல்லை.

அரசியல் சட்ட மரபுகளை மீறி தொடர்ந்து செயல்பட்டு வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள், அமைச்சர்களின் இலாகா மாற்றம் தொடர்பான முதலமைச்சரின் பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்காமல் திருப்பி அனுப்பியது கடும் கண்டனத்துக்கு உரியதாகும்.

முதலமைச்சர் மீண்டும் ஆளுநருக்கு கடிதம் அனுப்பினால் உடனே அதனை ஏற்று அமைச்சர்களுக்கு துறைகளைப் பகிர்ந்து அளிக்க ஒப்புதல் அளித்தே ஆக வேண்டும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் வைகோ எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டில் விண்வெளி

# பாதுகாப்பு வழித்தட முன்னெடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமை!

சென்னை, ஜூன் 18-

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தால் (TIIC) ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு வழித்தடத்தின் கலந்துரையாடல் கூட்டம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இராணுவ லெப்டினன்ட் ஜெனரல் கே.எஸ். பிரார், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஶ்ரீ முரளிதரன், தொழில் வல்லுநர்கள், பாதுகாப்புத் துறை, AVNL, DRDO, CVRDE, AIDAT, IIT Madras, SIDM ஆகிய துறைகளின் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாட்டின் முன்னணி தொழிலதிபர்கள் கலந்துகொண்டனர்.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் எஸ். கிருஷ்ணன், தொழில் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் கூட்டத்தில் பங்கு கொண்டோரையும் வரவேற்றார். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஹன்ஸ் ராஜ் வர்மா, பாதுகாப்புத் துறையில் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உள்ள வாய்ப்புகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

மேலும், ஆயுதமேந்திய போர் வாகனங்களின் பராமரிப்பு, பழுது மற்றும் மறுசீரமைப்பில் உள்ள வாய்ப்புகள், L&T கப்பல் கட்டும் தளத்தின் உள்கட்டமைப்பு, BHELஇன் பயன்படுத்தப்படாத திறன், வெடிமருந்து மையமாக விளங்கவுள்ள சிவகாசி மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் ஆகியவற்றை அவர் வலியுறுத்தினார்.

இராணுவ லெப்டினன்ட் ஜெனரல், கே.எஸ். பிரார், "இந்தியாவில் தயாரிப்பு" பற்றிய அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். மேலும், அறிவுசார் சொத்துரிமை மற்றும் வடிவமைப்பின் முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்புத் துறையில் உள்ள பெருவாரியான வாய்ப்புகள் குறித்தும் அவர் பேசினார்.

பாதுகாப்புத்துறை அதிகாரிகள், முன்னணி தொழிலதிபர்கள் மற்றும் நிபுணர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதுகாப்புப் பிரிவில் ஈடுபடச் செய்வது குறித்து பேசினார்கள். பெரும் தொலைவிற்குப் பாயும் ஏவுகணைப் பற்றிய சோதனை வசதிகளை உருவாக்குதல், உள்நாட்டு விமான உற்பத்திக்கான ஊக்குவிப்பு, விண்வெளி தொடர்பான சான்றிதழ் நிறுவனம், அரசின் நிதியுதவி, சோதனை மையங்கள், சிறப்பு மையம், பாதுகாப்பு சம்பந்தப்பட்டதில் கொள்முதல் நடைமுறைகள் ஆகிய அனைத்தும் விவாதிக்கப்பட்டன.

தொழில் துறை அமைச்சர், இந்தத் துறையில் உள்ள தேவை மற்றும் இடைவெளியை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளதாகவும், பாதுகாப்புத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தையும் வெளிப்படுத்தினார். தொழில் துறை அமைச்சர், மாநிலத்தை நோக்கிய தொழில்களின் பங்குக்கு தமிழ்நாடு அரசு சிறப்பு முயற்சிகள் எடுக்கும் என்று உறுதி அளித்ததுடன், 2030ஆம் ஆண்டில் தமிழகத்தை USD 1.00 டிரில்லியன் பொருளாதாரமாக மாற்றும் முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையை அடையும்பொருட்டு தமிழ்நாடு அரசு செயல்படும் என்றும் உறுதியளித்தார்.